RNI-N0: TNTAM/2021/83936




மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
DAILY EVENING
மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 347 | டிசம்பர்.17 2025 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# பொங்கல் கொண்டாட தமிழகம் வருகிறார் பிரதமர் மோடி



சென்னை, டிச.17-

தமிழக பா.ஜ., தொண்டர்களுடன் இணைந்து, பிரதமர் மோடி, பொங்கல் பண்டிகை கொண்டாட உள்ளார்.

தமிழகத்தில் ஜன., 15ல் பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுகிறது. இந்த பண்டிகையை, பிரதமர் மோடி தமிழகம் வந்து, பா.ஜ.,வினர் உடன் கொண்டாட முடிவு செய்துள்ளார்.

திருப்பூர், ஈரோடு என, கொங்கு மண்டலத்தில் உள்ள ஏதேனும் ஒரு மாவட்டத்தில், உள்ளூர் மக்களுடன் இணைந்து, பொங்கல் கொண்டாட உள்ளார். அவருடன், ஒரே சமயத்தில், 10,000 மகளிர் பொங்கல் வைக்க, தமிழக பா.ஜ.,வினர் திட்டமிட்டுள்ளனர்.

இதுகுறித்து, தமிழக பா.ஜ., மாநில நிர்வாகி ஒருவர் கூறுகையில், 'பிரதமர் மோடி, ஜன., 10 அல்லது 12ல் தமிழகம் வந்து பொங்கல் கொண்டாட வாய்ப்புள்ளது. 'தேர்தல் சமயத்தில் மோடியின் பொங்கல் கொண்டாட்டம், தேசிய ஜனநாயக கூட்டணி கட்சியினரை உற்சாகப்படுத்தும் வகையில் அமையும்' என்றார்.

# தமிழக காங்கிரஸ் கோஷ்டிகளிடம் மேலிட பொறுப்பாளர் ஆலோசனை

டில்லி, டிச.17-

சட்டசபை தேர்தல் கூட்டணி மற்றும் தொகுதி பங்கீடு குறித்து, டில்லியில் தமிழக காங்கிரஸ் முன்னணி தலைவர்களுடன், மேலிட பொறுப்பாளர் கிரிஷ் ஷோடங்கர் ஆலோசனை நடத்தினார்.

டில்லியில் நேற்று முன்தினம் ஓட்டு திருட்டை கண்டித்து, காங்கிரஸ் சார்பில், ராகுல் தலைமையில் பேரணி நடந்தது. அதில், தமிழக காங்கிரஸ் முன்னணி தலைவர்களும், நிர்வாகிகளும் பங்கேற்றனர்.

தி.மு.க., கூட்டணி, தொகுதி பங்கீடு குறித்து, தமிழக காங்கிரசின் ஐவர் குழு, முன்னாள் தலைவர்கள் மற்றும் தமிழக எம்.பி.,க்களிடம், ராகுல் ஆலோசனை நடத்துவார் என கூறப்பட்டது.

ஆனால், பேரணி முடிந்ததும், அன்று இரவே ராகுல், ஜெர்மனி சென்று விட்டார். இதனால், ஆலோசனை கூட்டம் ரத்து செய்யப்பட்டது. இந்நிலையில், டில்லியில் உள்ள கான்ஸ்டிடியூஷன் கிளப்பில், மேலிட பொறுப்பாளர் கிரிஷ் ஷோடங்கர் தலைமையில் நேற்று கலந்துரையாடல் கூட்டம் நடந்தது.

தமிழக காங்., தலைவர் செல்வப்பெருந்தகை, சட்டசபை காங்., தலைவர் ராஜேஷ்குமார், எம்.பி.,க்கள் மாணிக் தாகூர், கார்த்தி, விஷ்ணுபிரசாத், ராபர்ட் புரூஸ், விஜய் வசந்த் உள்ளிட்ட சிலர் மட்டும் தங்கள் கருத்துகளை தெரிவித்தனர்.

கலந்துரையாடல் முடிந்த பின், தமிழகத்தில் இருந்து சென்ற மாநில நிர்வாகி கள், முன்னணி தலைவர்களை தனித்தனியாக சந்தித்து, கிரிஷ் ஷோடங்கர் கருத்துகளை கேட்டறிந்தார்.

இது குறித்து, காங்கிரஸ் வட்டாரங்கள் கூறியதாவது: கடந்த 2026 சட்டசபை தேர்தலுக்கு பின் அமைந்த தி.மு.க., ஆட்சிக்கு பெரும்பான்மை இல்லை; காங்கிரஸ் தயவில் ஆட்சி நடந்தது.

ஆனால், தி.மு.க., ஆட்சியில் காங்கிரசுக்கு பங்கு தரவில்லை; அதற்கு பரிகாரமாக, இம்முறை ஆட்சியில் பங்கு என்ற நிபந்தனையுடன் கூட்டணி அமைக்க வேண்டும்.

அதற்கு தி.மு.க., உடன்படவில்லை என்றால், ஆட்சியில் பங்கு தர தயாராக இருக்கும் விஜய் தலைமையிலான த.வெ.க.,வுடன் கூட்டணி அமைக்க வேண்டும் என சில எம்.பி.,க்களும், பெரும்பான்மையான நிர்வாகிகளும் கிரிஷ் ஷோடங்கரிடம் வலியுறுத்தி உள்ளனர். இவ்வாறு அக்கட்சி வட்டாரங்கள் கூறின.



■ மதுரை மாநகராட்சி மண்டலம் 4 வார்டு எண்.49க்குட்பட்ட சுவாமி சன்னதி தெருவில் மழைநீர் வடிகால் சீரமைக்கும் பணியினை ஆணையாளர் சித்ரா விஜயன், இ.ஆ.ப., நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார் அருகில் மாநகராட்சி பொறியாளர்கள் உடன் உள்ளனர்.



■ தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுத்தேர்தல் 2026 மதுரை மாவட்டத்தில் வாக்கு எண்ணும் மையம் அமைப்பது தொடர்பாக மதுரை மாவட்டம் மதுரை மேற்கு வட்டம் மதுரை கல்லூரியில் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார்,இ.ஆ.ப.,மாநகர காவல் ஆணையர் ஜெ.லோகநாதன், இ.கா.ப., ஆகியோர்ஆய்வு மேற்கொண்டனர்.

# “மத்திய முகமைகளை பாஜக தவறாகப் பயன்படுத்துவது மீண்டும் அம்பலம்” : முதல்வர் ஸ்டாலின்

சென்னை: டிச.17-

நேஷனல் ஹெரால்டு வழக்குத் தீர்ப்பின் மூலம், எதிர்க்கட்சித் தலைவர்களைப் பழிவாங்குவதற்காக ஒன்றிய பாஜக அரசினால் மத்தியப் புலனாய்வு அமைப்புகள் தவறாகப் பயன்படுத்தப்படுவதை மீண்டுமொருமுறை நீதித்துறை அம்பலப்படுத்தியுள்ளது என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

நேஷனல் ஹெரால்டு பணமோசடி வழக்கில் காங்கிரஸ் தலைவர்கள் சோனியா காந்தி, ராகுல் காந்தி மற்றும் பிறருக்கு எதிராக அமலாக்கத் துறை தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையை டெல்லியில் உள்ள ரோஸ் அவென்யூ நீதிமன்றம் ஏற்க மறுத்துவிட்டது. மேலும், இது தொடர்பாக மேலதிக விசாரணையைத் தொடருமாறும் அமலாக்கத் துறைக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.



இந்நிலையில், இது குறித்து முதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில், “நேஷனல் ஹெரால்டு வழக்குத் தீர்ப்பின் மூலம், எதிர்க்கட்சித் தலைவர்களைப் பழிவாங்குவதற்காக ஒன்றிய பாஜக அரசினால் மத்தியப் புலனாய்வு அமைப்புகள் தவறாகப் பயன்படுத்தப்படுவதை மீண்டுமொருமுறை நீதித்துறை அம்பலப்படுத்தியுள்ளது.

சட்டரீதியான எந்தவொரு முகாந்திரமும் இன்றி, இத்தகைய வழக்குகள் அரசியல் எதிரிகளைத் துன்புறுத்தவும் களங்கப்படுத்தவுமே தொடரப்படுகின்றன.

உண்மையையும் அச்சமின்மையையும் தங்கள் பக்கம் கொண்டுள்ள நாடாளுமன்றக் காங்கிரஸ் குழுத் தலைவர் சோனியா காந்தி, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் எனது சகோதரர் ராகுல் காந்தி தவறிழைக்காதது நிரூபணமாகியுள்ளது. ஆனாலும், மதச்சார்பின்மை மற்றும் அரசியலமைப்பின் மாண்புநெறிகளில் அவர்கள் உறுதியாக நிற்பதைப் பொறுத்துக்கொள்ள முடியாத பாஜக காந்தி குடும்பத்தினரைத் தொடர்ந்து வேட்டையாடுவதில் குறியாக உள்ளது.

பாஜகவின் இந்தப் பழிவாங்கும் நோக்கம் நாட்டின் உயர் புலனாய்வு அமைப்புகளின் நம்பகத்தன்மையை மீண்டும் மீண்டும் சிதைத்து, அவற்றை வெறுமனே அரசியல் எதிரிகளை அச்சுறுத்துவதற்கான கருவிகளாகச் சுருக்குகின்றது.” இவ்வாறு முதல்வர் தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாடு நீர்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் (TNIAMP)

மதுரை, டிச.17-

தமிழ்நாடு நீர்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் மாநிலத்தின் நீர்வளங்களை அறிவியல் முறையில் பாதுகாத்து, சீராகப் பயன்படுத்துவதற்காக செயல்படுத்தப்படும் ஒரு முக்கிய அரசு திட்டமாகும். இந்தத் திட்டத்தின் மூலம் பாசன அமைப்புகள் நவீனமயமாக்கப்பட்டு, நீர் வீணாவதை குறைத்து, விவசாயத்திற்கு தேவையான நீர் உரிய நேரத்தில் கிடைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அணைகள், கால்வாய்கள், பாசன கட்டமைப்புகள் புதுப்பிக்கப்பட்டு, நீர் சேமிப்பு திறன் அதிகரிக்கப்படுகிறது.

மேலும், இத்திட்டம் விவசாயிகளின் உற்பத்தி மற்றும் வருமானத்தை உயர்த்தும் நோக்கத்துடன் செயல்படுகிறது. உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் (FPO) மூலம் விவசாயிகளுக்கு பயிற்சி, தொழில்நுட்ப ஆதரவு மற்றும் சந்தை வசதிகள் வழங்கப்படுகின்றன. நீர்மேலன்மையை மேம்படுத்தி, நிலைத்த விவசாய வளர்ச்சியை உறுதி செய்வதன் மூலம் கிராமப்புற பொருளாதாரம் வலுப்பெறுவதற்கு இந்தத் திட்டம் பெரிதும் துணைபுரிகிறது.

தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டத்தின் மூலம் மதுரை மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் சுமார் ஐந்தாயிரம் விவசாயிகள் உள்ளடக்கிய ஐந்து உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் பயனடைந்துள்ளன. இத்திட்டத்தின் மூலம் தொடக்க மானியம், உற்பத்தி முதலீட்டு மானியம் மற்றும் தொழில் விரிவாக்க மானியம் என ரூ.270 இலட்சத்திற்கு உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் செயல்பாடுகளை ஊக்குவிப்பதற்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்ற விவசாயி திரு.பால்பாண்டி அவர்கள் தெரிவிக்கையில்,

மதுரை மாவட்டம், செல்லம்பட்டி வட்டாரத்தில் சுமார் ஆயிரம் விவசாயிகளைக் கொண்டு வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் மூலம் 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீர்பாசன வேளாண்மை. நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் ஐராவதம் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் உருவாக்கப்பட்டது. செல்லம்பட்டி வட்டாத்தில் வருடத்தின் மூன்று போகமும் நெல் விளைவிக்கப்படுவது குறிப்பிடதக்கது. இந்நிலையில் விவசாயிகள் அனைவரும் அறுவடைக்கு அறுவடை இயந்திரம் இல்லாமல் கஷ்டப்பட்டு வந்த சூழலில் ஜிழிமிகிவிறி வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு நெல் அறுவடை இயந்திரத்தினை வழங்கியுள்ளது. இதன் மூலம் எங்கள் நிறுவனத்தின் விவசாயிகள் மட்டுமின்றி சுற்றுவட்டார விவசாயிகள் அனைவரும் பயனடைகின்றனர். எங்கள் சூழ்நிலை அறிந்து உரிய நேரத்தில் உதவி செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது சார்பாகவும், என் வட்டாரத்தில் உள்ள விவசாயிகள் சார்பாகவும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன் என தெரிவித்தார்.

# பாலியல் தொல்லைக்கு கட்டப் பஞ்சாயத்து: உரிய நடவடிக்கை எடுக்க அரசுக்கு அன்புமணி வலியுறுத்தல்

சென்னை, டிச.17-

தருமபுரியில் மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்த ஆசிரியர் மற்றும் அவரின் தவறை மூடி மறைக்க கட்டப்பஞ்சாயத்து செய்த கல்வித்துறை அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள பதிவில்: “தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளியை அடுத்த குடிப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியில் 9ம் வகுப்பு மாணவிக்கு அந்தப் பள்ளியில் உடற்கல்வி ஆசிரியராக பணியாற்றி வந்த மணிவண்ணன் என்பவர் பாலியல் தொல்லை கொடுத்ததாகவும், இதற்குக் காரணமான ஆசிரியர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் கட்டப் பஞ்சாயத்து செய்து அவர் தப்பிக்க விடப்பட்டதாகவும் வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன. அரசுப் பள்ளிகளில் பயிலும் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத சூழலை திமுக அரசு உருவாக்கியிருப்பது கண்டிக்கத்தக்கது.

குடிப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பில் பயின்று வரும் மாணவிகளை விளையாட்டுப் பாடவேளைக்கு பள்ளியில் இருந்து சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள திடலுக்கு அழைத்துச் சென்ற உடற்கல்வி ஆசிரியர் மணிவண்ணன், ஒரு மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்திருக்கிறார் என்று குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இது தொடர்பாக மாணவி அவரது பெற்றோரிடம் தெரிவித்ததையடுத்து அவர்கள் பள்ளியின் தலைமை ஆசிரியரிடம் புகார் செய்துள்ளனர். அதனடிப்படையில் அவர் நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக ஊர் முக்கியப் பிரமுகர்களிடம் பேசி பிரச்சினையைத் தீர்க்கும்படி கேட்டுக்கொண்டுள்ளார்.

அதைத் தொடர்ந்து அந்தப் பகுதியைச் சேர்ந்த உள்ளாட்சி முன்னாள், இந்நாள் பிரதிநிதிகள், வழக்கறிஞர்கள் உள்ளிட்ட சிலர் குடிப்பட்டியைச் சேர்ந்த துணை நடிகர் ஒருவரின் வீட்டில் கூடி கட்டப் பஞ்சாயத்து பேசியுள்ளனர்.

அப்போது பாதிக்கப்பட்ட மாணவிக்கு வழங்க ஆசிரியர் மணிவண்ணனிடம் ரூ.10 லட்சம் வாங்கிய கட்டப் பஞ்சாயத்து கும்பல்,



அதில் ரூ.6 லட்சத்தை பாதிக்கப்பட்ட மாணவியின் குடும்பத்திற்கு கொடுத்து விட்டு மீதமுள்ள தொகையை தங்களுக்குள் பிரித்துக் கொண்டதாகக் கூறப்படுகிறது. இதில் தொடர்புடைய ஒருவர் இந்த விவரங்களை பொதுவெளியில் தெரிவித்ததைத் தொடர்ந்து தான் மாணவிக்கு இழைக்கப்பட்ட கொடுமை வெளியில் தெரியவந்துள்ளது.

பாலியல் தொல்லைக்கு ஆளாக்கப்பட்ட மாணவிக்கு நீதி வழங்க வேண்டியது ஒட்டுமொத்த சமூகத்தின் கடமை ஆகும். ஆனால், அந்த மாணவி பெரிய பின்புலம் இல்லாத குறும்பர் சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதையும், அவரது தந்தை இல்லாத நிலையில், தாயும் இந்த சிக்கல் தொடர்பாக அலையும் போது விபத்தில் சிக்கி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார் என்பதையும் பயன்படுத்திக் கொண்டு மாணவிக்கு கொடுமை இழைத்தவர்களை ஒரு தரப்பினர் காப்பாற்றியுள்ளனர்.

குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருக்கும் ஆசிரியர் மணிவண்ணன் இதற்கு முன் பணியாற்றிய பள்ளிகளிலும் இதே குற்றச்சாட்டுக்கு ஆளாகி பணியிட மாற்றம் செய்யப்பட்டவர் என்று கூறப்படுகிறது. ஆசிரியர்கள் எனப்படுபவர்கள் தாய், தந்தைக்கு அடுத்த நிலையில், கடவுளுக்கும் கூடுதலான இடத்தில் வைத்து மதிக்கப்பட வேண்டியவர்கள். அவர்களை நம்பித் தான் பெற்றோர் தங்களின் பிள்ளைகளை பள்ளிகளுக்கு அனுப்புகின்றனர். ஆனால், வேலிகளே பயிர்களை மேய்வதைப் போல குழந்தைகளுக்கு பாலியல் தொல்லை கொடுப்பது மன்னிக்கவே முடியாத குற்றம் ஆகும்.

இந்தக் குற்றத்தைச் செய்த ஆசிரியருக்கு மிகக் கடுமையான தண்டனை வழங்கியிருக்க வேண்டும். ஆனால், பாதிக்கப்பட்ட மாணவிக்கு நீதி வழங்காமல், நிதி வழங்கி சரி செய்து விடலாம் என்று ஒரு கும்பல் முயற்சி செய்திருப்பதையும், அதற்கு பள்ளி தலைமை ஆசிரியர், மாவட்டக் கல்வி அலுவலர் உள்ளிட்ட அதிகாரிகள் துணை போயிருப்பதையும் பார்க்கும் போது திமுக ஆட்சியில் பள்ளிக்கல்வித் துறையில் அநீதியும், குற்றவாளிகளைக் காப்பாற்றும் போக்கும் எந்த அளவுக்கு புரையோடிப்போயிருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ள முடியும். இவை அனைத்தையும் திமுக அரசு வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறது. பாதிக்கப்பட்ட மாணவிக்கு நியாயம் வழங்காமல் கட்டப் பஞ்சாயத்து செய்வது தான் திமுகவின் நீதியா? என்பதை ஆட்சியாளர்கள் விளக்க வேண்டும்.

மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்த ஆசிரியர் உடனடியாக கைது செய்து சிறையில் அடைக்கப்பட வேண்டும். அவரின் தவறை மூடி மறைக்கும் வகையில் கட்டப் பஞ்சாயத்து செய்தவர்களும், அதற்கு துணை நின்ற கல்வித்துறை அதிகாரிகள் மீதும் சட்டப்படி நடவடிக்கை எடுக் கப் பட வேண்டும். இல்லாவிட்டால் பாதிக்கப்பட்ட மாணவிக்கு நீதி பெற்றுத் தர பாட்டாளி மக்கள் கட்சி போராட்டம் நடத்தும்.” என்று அன்புமணி கூறியுள்ளார்.



# வேலூரில், மாநில அளவிலான கலை திருவிழா போட்டியில் வெற்றி பெற்ற அரசு பள்ளி மாணவர்களுக்கு ஆட்சியரகத்தில் பாராட்டு விழா

வேலூர், டிச.17

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, சத்துவாச்சாரி, ஆட்சியர் அலுவலகத்தில் காயிதே மில்லெத் கூட்ட அரங்கில் மக்கள் குறைதீர்வு நாள் கூட்டம், மாவட்ட வருவாய் அலுவலர் மா, சிவசுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாநில அளவிலான கலைத் திருவிழா போட்டிகளில் வேலூர் மாவட்டத்திலிருந்து கலந்து கொண்டு, மாநில அளவில் முதல், 2ம், 3ம் இடத்தை பிடித்த மாணவ மாணவிகளுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் சிவசுப்பிரமணியன், பரிசு வழங்கி பாராட்டுகளை தெரிவித்தனர். இந்நிகழ்ச்சியில் வேலூர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பிரேமலதா, உதவி திட்ட அலுவலர் (ஒருங்கிணைந்த பள்ளி கல்வி) ஜோதீஸ்வரர் பிள்ளை, வெற்றி பெற்ற மாணவர்கள் சஞ்சனா, வினித், ஜெகதீஸ்வரன், ரித்திகா, நித்ரன், ஸ்ரேயா, கவி ஸ்ரீ, சம்யுக்தா, காவியா, ஜீவிதா, சுஜிதர், கேஷிதா, விஷ்ணுகுமார் உள்ளிட்ட ஆசிரியர் பெருமக்கள் உடனிருந்தனர்.



# வேலூர் மாவட்ட ஆட்சியரகத்தில் மக்கள் குறைதீர்வு நாள் கூட்டம்

வேலூர், டிச.17-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக காயிதே மில்லத் கூட்ட அரங்கம், மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் சிவசுப்பிரமணியன், பொதுமக்களிடமிருந்து 500 மனுக்களை பெற்று சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். இக்கூட்டத்தில் தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) மாறன், மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர் எஸ்.ஆர்.என். மதுசெழியன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அலுவலர் ஜெயசித்ரா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# வேலூர் மாவட்ட ஆட்சியரக மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் லத்தேரியை சார்ந்த மோனிஷ் குமாருக்கு ரூ.9500 மதிப்பிலான சிறப்பு சக்கர நாற்காலி வழங்கினர்

வேலூர், டிச.17-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக காயிதே மில்லத் கூட்ட அரங்கில், மக்கள் குறை தீர்வு நாள் கூட்டத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின்கீழ், கி.வ.குப்பம் வட்டம், லத்தேரி கிராமத்தை சார்ந்த மோனிஷ்குமார் என்ற மாற்றுத்திறனாளிக்கு ரூ.9500/ மதிப்பிலான மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்டோருக்கான சிறப்பு சக்கர நாற்காலியை மாவட்ட வருவாய் அலுவலர் சிவசுப்பிரமணியன் வழங்கினார். இந்நிகழ்வின்போது மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அலுவலர் பாபு மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.



■ வேலூர் மாவட்டம் காட்பாடி வட்டம் அம்முண்டி ஊராட்சியில் வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் 20252026 ஆம் ஆண்டுக்கான கரும்பு அரவையை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி. நேற்று தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.இரா. சுப்புலெட்சுமி,வேலூர் மாநகராட்சி, 1 வது மண்டலக்குழுத்தலைவர் புஷ்பலதா வன்னியராஜா, வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை இணை பதிவாளர்/செயலாட்சியர் கோ.சோமசுந்தரம், ஒன்றியக்குழு உறுப்பினர் நந்திவர்மன், முன்னாள் மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் தணிக்காசலம், கரும்பு பெருக்க அலுவலர் சேகர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# சத்துவாச்சாரியில் புகழ்பெற்ற டிராகோ ஆட்டோ டெடெய்லிங் ஷோரூம் திறப்பு விழா : சட்டமன்ற உறுப்பினர்கள் நந்தகுமார், கார்த்திகேயன் ஆகியோர் பங்கேற்று திறந்து வைப்பு

வேலூர், டிச.17

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, சத்துவாச்சாரி ஆர்,டி,ஓ அலுவலகம் அருகில் 5வது அவென்யுவில் கிங்ஸ்மென் குருப்பின் அங்கமான புகழ்பெற்ற டிராகோ ஆட்டோ டெடெய்லிங் ஷோரூம் சிறப்பு விழா கோலாகலமாக நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளர்களாக அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார், வேலூர் சட்டமன்ற உறுப்பினர் ப.கார்த்திகேயன் கலந்துகொண்டு ரிப்பன் வெட்டி திறந்து வைத்து குத்து விளக்கு ஏற்றி சிறப்பித்தனர். மேலும், சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட ஊராட்சி திட்டக்குழு தலைவர் மு.பாபு,பள்ளிகொண்டா



பேரூர் திமுக செயலாளர் டி.எம். ஜாகிர் உசேன், வேலூர்மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் சுகுமாரன், கலந்து கொண்டு திறப்பு விழாவை சிறப்பித்தனர்.

இந்நிகழ்ச்சியில் சங்கரன்பாளையம் பகுதி கழக செயலாளர் பாலமுரளி கிருஷ்ணா, கே.வி.குப்பம் ஒன்றிய திமுக பொருளாளர் சிட்டிபாபு, அந்தோணி, உள்ளிட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் தொழிலதிபர்கள் கௌரவ விருந்தினர்களாக கலந்து கொண்டனர். விழாவிற்கு வந்த அனைவரையும் ஷோரூம் உரிமையாளர்கள் சி.கிஷோர்பாபு. குடும்பத்தினர்கள் மற்றும் ஜா.ஜாபர் குடும்பத்தினர்கள் அனைவரையும் வரவேற்று சிறப்பு அழைப்பாளர்களையும், சிறப்பு விருந்தினர்களையும் மேளதாளத்துடன், பட்டாசுகள் வெடித்து வரவேற்று பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர். இதில் டிராகோ ஆட்டோ டடைலிங் ஷோரூம் அலுவலர்கள் பணியாளர்கள் மற்றும் குடும்பத்தினர் வாடிக்கையாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு இந்த விழாவை சிறப்பித்தனர்.





# விநாயகர் ஆலயத்தின் 10ஆம் ஆண்டு ஸ்ரீ தர்ம சாஸ்தா ஐயப்ப பக்தர்கள் அன்னதான விழா

சிவகங்கை, டிச.17-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை மூங்கில் ஊரணி கோட்டை நகர் அருகில் அமைந்துள்ள ஸ்ரீ ஐயப்ப, விநாயகர் ஆலயத்தின் 10 ஆம் ஆண்டு ஸ்ரீ தர்ம சாஸ்தா ஐயப்ப பக்தர்கள் அன்னதான விழாவை முன்னிட்டு, நேற்று விசுவாவசு வருடம் மார்கழி மாதம் ஒன்றாம் தேதி காலை அருள்மிகு தர்ம சாஸ்தா ஐயப்ப பக்தர்கள் ஐயப்ப சுவாமிக்கு கணபதி ஹோமம், அபிஷேகம், அலங்காரம், யாகம், பூஜைகள் மற்றும் சிறப்பு வழிபாடுகள் மேற்கொண்டனர். அதனைத் தொடர்ந்து அருள்மிகு ஐயப்ப விநாயகர் கோவில் முன்பாக மாபெரும் சிறப்பு அன்னதானம் சிறப்பாக நடைபெற்றது.



இவ்விழாவினை ஸ்ரீ தர்ம சாஸ்தா ஐயப்ப பக்தர்கள் குழு, மூங்கில்ஊரணி கிராம பொதுமக்கள் ஆகியோர் இணைந்து முன்னேற்பாடுகளை மேற்கொண்டனர். இந்நிகழ்வில் ஐயப்ப பக்தர்கள், விநாயக பக்தர்கள், மூங்கில்ஊரணி மற்றும் அதனை சுற்றியுள்ள கிராம பொதுமக்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டு அருள் பெற்று சென்றனர்.






# கொட்டகுடி ஊராட்சி கீழக்கோட்டையில் மின் சிக்கன வார விழா விழிப்புணர்வு பிரச்சாரம்

காளையார் கோவில். டிச.17

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்திலுள்ள கொட்டகுடி ஊராட்சி கீழக்கோட்டையில் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் சார்பாக டிசம்பர் 14ஆம் தேதியிலிருந்து டிசம்பர் 20ஆம் தேதி வரை இந்தியா முழுவதும் நடைபெறும் மின்சார சிக்கன வார விழா விழிப்புணர்வு பிரச்சாரம் நடைபெற்றது. மகாத்மா காந்தி 100 நாள் வேலை வாய்ப்பு திட்ட பணியாளர்கள் இடையே ஓய்வு இடைவெளியில் மின்சார சிக்கனம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. திட்ட பணித்தள பொறுப்பாளர் இந்துமதி வரவேற்றார். தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி மின் சிக்கனத்தின் அவசியமானது மின் உற்பத்திக்கு நிலக்கரி நீர் போன்ற இயற்கை வளங்கள் தேவை. சிக்கனம் செய்வதன் மூலம் இந்த வளங்களைப் பாதுகாக்கலாம். தமிழகம் போன்ற இடங்களில் மின் தட்டுப்பாடு ஏற்படும்போது சிக்கனம் செய்வது அனைவருக்கும் மின்சாரத்தை கிடைப்பதை உறுதி செய்யும். மின் கட்டணத்தை குறைத்து குடும்ப பட்ஜெட்டிற்கு உதவும். மின் உற்பத்தி குறைவதால் மாசுபாடு குறையும். வீடு மற்றும் அலுவலகத்தில் தேவையில்லாதபோது விளக்குகள் மின்விசிறிகள் ஏர் கண்டிஷனர்கள் போன்றவற்றை அணைக்கவும் சாதாரண பல்புக்களுக்குப் பதிலாக குறைந்த மின்சாரம் பயன்படுத்தப்படும் லிணிஞி பல்புகளைப் பயன்படுத்தவும் பயன்பாட்டில் இல்லாதபோது தொலைக்காட்சிகள் கணினிகள் போன்றவற்றை அணைக்கவும் பழைய மின்சாதனங்கள் அதிக மின்சாரத்தை வீணடிக்கும். எனவே புதிய ஆற்றல் திறன் கொண்ட உபகரணங்களை வாங்குவோம். பிரிட்ஜின் கதவை அடிக்கடி திறப்பதை தவிர்க்கவும். ஹீட்டர்கள் வாட்டர் மோட்டார் போன்றவற்றை தேவைக்கேற்ப பயன்படுத்தவும் மின்சாரத்தை சேமிக்கும் ஙிணிணி சான்று அளிக்கப்பட்ட உபகரணங்களை வாங்கவும் முடிந்தால் சூரிய மின்சக்தி போன்ற புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்களை பயன்படுத்தவும் வேண்டும் என்றார். ஆங்கிலப் பட்டதாரி ஆசிரியை கீதா வீடுகளில் மின் சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் செயல்படுத்தவும் கேட்டுக்கொண்டார். திட்ட பணித்தள பொறுப்பாளர் அருணா நன்றி கூறினார். பொதுமக்கள் ஆர்வமுடன் கேட்டுத் தெரிந்துகொண்டனர்.

# சம கல்வி உரிமையைப் பறிக்கும் திமுக அரசுக்கு கோர்ட் சம்மட்டி அடி; நயினார் நாகேந்திரன்

சென்னை, டிச.17-

தமிழகத்தில், ஜவஹர் நவோதயா வித்யாலயா பள்ளிகள் அமைப்பது தொடர்பான வழக்கில், 'தமிழக மாணவர்களை அழுத்தத்திற்கு ஆளாக்காதீர்கள்; உங்கள் மொழிப் பிரச்னைகளை நீதிமன்றத்திற்கு கொண்டு வராதீர்கள்' என, தமிழக அரசுக்கு உச்ச நீதிமன்றம் அறிவுரை வழங்கியது.

இது தொடர்பான செய்தி நமது நாளிதழில் வெளியாகி இருந்தது. இந்த செய்தியை மேற்கொள் காட்டி, நயினார் நாகேந்திரன் வெளியிட்ட அறிக்கை: சம கல்வி உரிமையைப் பறிக்கும் திமுக அரசுக்கு நீதிமன்றம் சம்மட்டி அடி கொடுத்துள்ளது.

கல்வியில் சிறந்து விளங்கும் கிராமப்புற மாணவர்களுக்கு இலவச உண்டு உறைவிட வசதியுடன் தரமான கல்வியை நல்கும் ஜவஹர் நவோதயா பள்ளிகளைத் தனது அற்ப அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக தமிழகத்தில் வரவிடாமல் தடுக்கும் திமுக அரசைத் தனது கேள்விகளால் துளைத்தெடுத்துள்ளது உச்ச நீதிமன்றம்.

நாடு முழுவதும் உள்ள 650 நவோதயா பள்ளிகள் மூலம் பல்லாயிரக்கணக்கான கிராமப்புற மாணவர்கள் பயன்பெற்று வரும் நிலையில், பெயருக்கு மொழியைக் காரணம் காட்டி மறுத்து, தமிழக கிராமப்புற மாணவர்களை முன்னேறவிடாமல் தடுப்பது முறையானதல்ல எனச் சரியாக சுட்டிக்காட்டியுள்ளது.

தமிழகத்தில் பல பள்ளிகள் இருக்கிறதென்றால், கல்வியில் சிறந்து விளங்கும் கிராமப்புற மாணவர்களுக்கான பள்ளியும் இருந்தால் என்ன தவறு என்று சுருக்கென்று கேட்டதோடு, பள்ளிகள் பெருகும் போது தான் முன்னேறும் வாய்ப்புகளும் பெருகும் எனச் சுட்டிக்காட்டி திமுக அரசைத் தலையில் நறுக்கென்று குட்டு வைத்துள்ளது மகிழ்ச்சியளிக்கிறது.

இத்தனை ஆண்டுகள் ஏழை எளிய கிராமப்புற மாணவர்களின் எதிர்காலத்தைச் சிதைத்த பாவத்திற்கு பிராயச்சித்தமாக உச்ச நீதிமன்றத்தின் ஆணைக்கிணங்க மாவட்டந்தோறும் நவோதயா பள்ளி அமைப்பதற்காக நிலத்தை திமுக அரசு கண்டறிய வேண்டும்.

திமுக அரசு ஒருவேளை இந்த நீதிமன்ற உத்தரவையும் வழக்கம்போல் அவமதித்தாலும் பிரச்னையில்லை, அடுத்து அமையவிருக்கும் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியால் தமிழகம் முழுவதும் நவோதயா பள்ளிகளைத் தொடங்கி, தமிழகத்தின் கல்வித் தரத்தை முன்னேற்றி, மாணவர்கள் சிறந்து விளங்கச் செய்யப்படும். இது உறுதி. இவ்வாறு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

# பெண்ணிடம் நகை பறித்து சென்றவருக்கு மூன்று ஆண்டுகள் தண்டனை விதித்த நீதிபதி




சிவகங்கை, டிச.17

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி உட்கோட்டம், காரைக்குடி தெற்கு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பாப்பா ஊரணியில் கடந்த 19.08.2020ம் தேதி இந்திரா என்பவரிடம் தங்க நகை பறித்து சென்றது தொடர்பாக சிவகங்கை நகர் வாணியங்குடியைச் சேர்ந்த சங்கர் @குட்டைசங்கர் மற்றும் வைரம்பட்டியைச் சேர்ந்த ராஜ்குமார் ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, நீதிமன்றக்காவலுக்கு அனுப்பப்பட்டனர்.

இந்நிலையில், இவ்வழக்கானது காரைக்குடி குற்றவியல் நீதித்துறை நடுவர் முன்பு விசாரணை செய்யப்பட்டு வந்தது. நேற்று (15.12.2025) இவ்வழக்கின் இறுதி விசாரணை முடிந்து குற்றவாளிகளான 1. சங்கர் @ குட்டைசங்கர், மற்றும் 2. ராஜ்குமார் ஆகியோருக்கு காரைக்குடி குற்றவியல் நீதித்துறை நடுவர் குற்றவாளிகளுக்கு 3 வருடம் கடுங்காவல் சிறை தண்டனை மற்றும் ரூ.5000 அபராதமும், விதித்தும் தீர்ப்பளித்தார்

மேலும், இவ்வழக்கில் 2வது எதிரியான ராஜ் குமார் என்பவர் திருப்பூர் ஊத்துக்குளி காவல் நிலைய திருட்டு வழக்கில் கோயம்பத்தூர் சிறையில் 2 ஆண்டுகள் தண்டனை கைதியாக இருந்து வருகிறார் என்பது குறிப்பிடதக்கது.




■ வேலூர் புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள சீயோன் பெந்தகோஸ்தே சபையின் 21 ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு நேற்று திருச்சபையில் சிறப்பு ஆராதனை நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி கலந்து கொண்டார். சீயோன் பெந்தேகோஸ்தே சபையின் தலைமை போதகர் இம்மானுவேல் பால் அவர்கள் விழாவின் சிறப்பு அழைப்பாளர்களான சட்டமன்ற உறுப்பினர் நந்தகுமார் மற்றும் கார்த்திகேயன் வரவேற்றார். வேலூர் மாநகர மேயர் சுஜாதா ஆனந்தகுமார் லிடியா இமானுவேல் அவர்கள் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார். இந்த சிறப்பு ஜெப கூடுகை காண ஏற்பாடுகளை எஸ்ரா ஜானதன் மற்றும் பெஞ்சமின் ஜாஷ்வா ஆகியோர் செய்திருந்தனர். விழாவில் கலந்துகொண்டு ஏழை எளிய மக்கள் 200 பேருக்கு சிறப்பு விருந்தினர்கள் ஆடைகளை வழங்கினார்கள். சிறப்பு விருந்தினர்கள் உரையாற்றும் பொழுது ஒழுக்கம் சமாதானம் பகுந்தளிப்பு மற்றும் ஏழை எளிய மக்களுக்கு உதவுவது மூலம் கிறிஸ்துவ மக்கள் கிறிஸ்துமஸ்ஸை சந்தோஷத்துடன் கொண்டாடுகிறார்கள் என்று கூறினார்கள்.




■ கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மின்னஞ்சல் மூலமாக வெடிகுண்டு மிரட்டல்வெடிகுண்டு சோதனை போலீசார் 10க்கும் மேற்பட்டோர் மோப்பநாய், மெட்டல் டிடெக்டர் உடன் வந்து சோதனையால் பரபரப்பு மேலும் அங்கு உள்ள பொதுமக்கள் மற்றும் அதிகாரிகளை வெளியேற்ற மால் சோதணையிட்டதாக பொதுமக்கள் குற்றம் சாட்டி வருகின்றனர்.



# கிழக்கு தாம்பரத்தில் தேமுதிக இளைஞர் அணி செயலாளர் விஜயபிரபாகரன் பிறந்த நாளை முன்னிட்டு பெருமாள் கோவிலில் சிறப்பு பூஜை

தாம்பரம், டிச.17-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் இளைஞர் அணி செயலாளர் வி.விஜயபிராபகரன் பிறந்த நாளை முன்னிட்டு கிழக்கு தாம்பரம் பகுதியில் உள்ள பெருமாள் கோவிலில் செங்கல்பட்டு மாவட்ட செயலாளர் அனகை முருகேசன் ஆலோசனை படி தாம்பரம் மாநகர தெற்கு பகுதி தேமுதிக செயலாளர் கேட் எம்.தர்மா தலைமையில் நடைபெற்ற சிறப்பு பூஜையில் மாவட்ட துணை செயலாளரும், தொகுதி பொருப்பாளருமான மா.செழியன் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தார் அப்போது நிர்வாகிகள் மாவட்ட மகளிர் அணி பாத்திமா, எம்.இளங்கோ, நெரும்பூர் ராஜேந்திரன் சந்தோஷ்குமார், எழுமலை, கலா ஆறுமுகம், ஐ.கே.தர்மா, எழுமலை, மாரியம்மாள், தேன் என்ற லட்சுமிகாந்த் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# புதிய பாலம் கட்டித் தரப்படுமா மாவட்ட ஆட்சியருக்கு கோரிக்கை கடிதம்

சிவகங்கை, டிச.17

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி நகர் காங்கிரஸ் சிறுபான்மையின் தலைவர் அம்பலம் ராவுத்தர் நெய்னார் என்பவர் சிவகங்கை மாவட்ட ஆட்சியருக்கு கோரிக்கை கடிதம் எழுதியுள்ளார் அதில்

சிவகங்கை மாவட்டம், இளையான்குடி பேரூராட்சிக்கு உட்பட்ட பகைவரைவென்றான் ஊருக்குச் செல்லும் வழியில் புனித அன்னாள் பதின்ம மேல்நிலைப் பள்ளி கடந்த 40 வருடமாக செயல்பட்டு வருகின்றது. இப்பள்ளியில் இளையான்குடி மற்றும் இளையான்குடி சுற்றியுள்ள கிராமத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மாணவ மாணவியர்கள் எல்.கே.ஜி. முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை கல்வி பயின்று வருகின்றார்கள். இப்பள்ளிக்கும், பகைவரைவென்றான் கிராமத்திற்கும் செல்லும் வழியில் அமைந்துள்ள பாலத்தின் வழியாக தினமும் பள்ளிக்கு குழந்தைகளை ஏற்றிக் கொண்டு பள்ளி வாகனம் மற்றும் நூற்றுக்கணக்கான ஆட்டோ, வேன்கள் மேலும் அருகிலுள்ள ரேஷன்கடைக்கு சரக்கு கொண்டு வரும் கனரக லாரிகள் இந்த சாலையில் அமைந்துள்ள பாலத்தின் வழியாகவே செல்கின்றது.

மேலும் பொதுமக்கள் செல்லும் வாகனமும், இந்த சாலையின் வழியாகச் செல்ல வேண்டும். இந்தச் சாலையில் அமைந்திருக்கும் பாலம் கடந்த 10 வருடமாக மிகவும் மோசமான சூழ்நிலையில் உள்ளது. இந்த பாலம் எந்த நேரத்திலும் இடிந்து விழும் சூழ்நிலையில் உள்ளது.

எனவே இப்பாலத்தின் வழியாக செல்லும் பள்ளிக் குழந்தைகள் மற்றும் பொதுமக்கள் நலன் கருதி இப்பாலம் இடிந்து விபத்து ஏற்படுவதற்கு முன்பாக புதிய பாலம் அமைக்க இளையான்குடி மற்றும் பகைவரைவென்றான் பொதுமக்கள், பள்ளி நிர்வாகம் மற்றும் சமூகநல ஆர்வலர்கள் ஆகியோரின் கோரிக்கையை ஏற்று புதிய பாலம் அமைத்துத்தரும்படி மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன் என குறிப்பிட்டு இருந்தது பொதுமக்களின் கோரிக்கைக்கு இணங்க புதிய பாலம் கட்டித் தரப்படுமா என்ற எதிர்பார்ப்பில் பொதுமக்கள் உள்ளனர்.




# கோவையில் நெட்வொர்க் வெல்பேர் அசோசியேசன் சார்பில் மூன்று அம்ச கோரிக்கைகளை வென்றெடுக்க மாபெரும் விளக்கக் கூட்டம்

கோவை, டிச.17-

சிங்காநல்லூர் வெங்கிட லட்சுமி கல்யாண மண்டபத்தில் நடைபெற உள்ளது இது குறித்து செய்தியாளர்கள் சந்திப்பு ஆடி ஸ்வீதியில் உள்ள பத்திரிகையாளர் மன்றத்தில் நெட்வொர்க் வெல்ஃபேர் அசோசியேஷன் நிறுவனத் தலைவர் மனோகரன் தலைமையில் நடைபெற்றது இந்த நிகழ்ச்சி குறித்து அவர் கூறியதாவது நேரடி வர்த்தகத்தை வரைமுறைப்படுத்தும் வகையில் கேரளாவை போல் சட்டம் இயற்றி தனி வாரியம் அமைக்கப்பட வேண்டும் அதன் மூலம் மக்களை ஏமாற்றும் போலி நிதி நிறுவனங்களிடமிருந்து மக்களை காக்க வேண்டும் போலி நிறுவனங்களிடம் ஏமாந்த மக்களுக்கு நியாயம் கிடைக்க முன்னாள் நீதிபதி தலைமையில் ஒரு ஆணையம் அமைத்து குறுகிய காலத்தில் நிவாரணம் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும் நெட்வொர்க் துறையில் ஈடுபட்டுள்ள லட்சக்கணக்கானோர் பயன்படும் வகையில் ஒரு நல வாரியம் அமைக்க வேண்டும் இந்த மூன்று அம்ச கோரிக்கைகளை வென்றெடுக்க மாபெரும் விளக்கக் கூட்டம் நடைபெற உள்ளதாகவும் தெரிவித்தார்.மேலும் இதில் தமிழகம் முழுவதும் இருந்து நிர்வாகிகள் உறுப்பினர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொள்ள தாகவும் தெரி வித்தார். உடன் வெல்ஃபேர் அசோசியேஷன் நிர்வாகிகள் உட்பட பலர் உடன் இருந்தனர்

# அருட்காட்சியகத்தில் இருந்து நேரு ஆவணங்கள் காணாமல் போகவில்லை: பார்லியில் மத்திய அரசு தகவல்

டில்லி, டிச.17-

நேருவின் ஆவணங்கள் காணாமல் போனதாக சில அறிக்கைகள் இருந்தாலும், பிரதமர் அருங்காட்சியகம் மற்றும் நூலகத்தின் 2025ம் ஆண்டு ஆய்வின் படி எந்த ஆவணங்களும் காணாமல் போகவில்லை என லோக்சபாவில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.



புதுடில்லியில் ராஷ்டிரபதி பவனின் தெற்கு பகுதியில் மாருதி வளாகத்தில் பிரதமர்கள் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டு உள்ளது. நாட்டின் தனித்துவமான பங்களிப்பை வழங்கிய அனைத்து பிரதமர்கள் பற்றிய தகவல்கள், இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இங்கு உள்ள மறைந்த முன்னாள் பிரதமர் ஆவணங்கள் காணாமல் போனதாக குற்றச்சாட்டு எழுந்தது.

கடந்த ஜூன் மாதம் பிரதமர் மோடி பங்கேற்ற இந்தியப் பிரதமர் அருங்காட்சியகம் மற்றும் நூலகம் ஆண்டு பொதுக்குழுவில் கேள்வி எழுப்பப்பட்டு இருந்தது. இது தொடர்பாக பார்லிமென்ட் குளிர்கால கூட்டத்தொடரில் மத்திய கலாசாரத்துறை அமைச்சர் கஜேந்திர சிங் அளித்த பதில்:

நேருவின் ஆவணங்கள் காணாமல் போனதாக சில அறிக்கைகள் இருந்தாலும், பிரதமர் அருங்காட்சியகம் மற்றும் நூலகத்தின் 2025ம் ஆண்டு ஆய்வின் படி எந்த ஆவணங்களும் காணாமல் போகவில்லை. ஆண்டுதோறும் ஆவண தணிக்கை நடத்துவது இல்லை.

அருங்காட்சியக ஆண்டு பொதுக்குழுவில் நேரு தொடர்பான ஆவணங்கள் காணாமல் போனதாக கூறப்பட்டாலும் ஆவணங்கள் ஆய்வின் போது ஏதும் கண்டறியப்படவில்லை. இவ்வாறு கஜேந்திர சிங் கூறியுள்ளார்.






புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி தாலுகா மீனம்பட்டி மீனம்பட்டி கிராமத்தில் மீனா குளம் தனிநபரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது ஆக்கிரமிப்பு அகற்றக் கோரி பொதுமக்கள் கோரிக்கை



# சிவகங்கை மதகுபட்டியில் வெற்றி வாக்குச்சாவடி ஆலோசனை கூட்டம்

## ஒ.செ.முத்துராமலிங்கம், பவானி, செல்வம், குமணன், முத்துவேல் செல்வம் பங்கேற்பு

சிவகங்கை. டிச.17

சிவகங்கை மாவட்டம் தமிழக முதல்வர் ஸ்டாலின் ஆணையின்படியும் , சிவகங்கை மாவட்ட செயலாளர், தமிழ்நாடு கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் ஆலோசனையின் பேரிலும் சிவகங்கை மாவட்டம் முழுவதும் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்ற முன்னெடுப்பு ஆலோசனை கூட்டம் நடைபெற்று வருகிறது...

அந்த வகையில் சிவகங்கை வடக்கு ஒன்றிய திமுக மதகுபட்ட கிளைக்கழக பூத்தில் கிளைக்கழக செயலாளர்கள் அரிச்சந்திரன், முருகானந்தம், கருப்பையா , ஆகியோரது தலைமையிலும் , ஒன்றிய துணைச் செயலாளர் ஒக்கூர் புதூர் செல்வம் , மாவட்ட மகளிரணி அமைப்பாளர் பவானி கணேசன் , மாவட்ட பிரதிநிதிகள் ஒக்கூர் லெ. சோமசுந்தரம் , சோழபுரம் மாரி , , மாவட்ட சுற்றுசூழல் அணி திருமலை குமணன், ஐடி விங் மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் வாடிவாசல் முத்துவேல் செல்வம், ஒன்றிய வர்த்தக அணி அமைப்பாளர் மதகுபட்டி ஹனீ்ஃபா ஆகியோரது முன்னிலையிலும் நடைபெற்றது...

இந்த ஆலோசனை கூட்டத்தில் சிவகங்கை வடக்கு ஒன்றிய செயலாளர் திருமலை ஆ. முத்துராமலிங்கம் கூட்டத்தின் நோக்கம் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்...

அப்போது பிஎல்ஏ 2 , பிடிஏ , பிஎல்சிக்களின் பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கினார்... இதனிடையே பவானி கணேசன் மற்றும் திருமலை குமணன் ஆகியோரும் ஆலோசனைகளை வழங்கினர்...

இந்த கூட்டத்தில் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் இடையமேலூர் வேல்முருகன், ஒன்றிய மாணவரணி திருமலை ஏழுமலைச்சாமி, இளஞ் செழியன், புல்லட் ராஜா உள்ளிட்ட ஏராளமான ஒன்றிய, கிளைக்கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்...



# சிவகங்கை வடக்கு ஒன்றிய திமுக அலவையில் வெற்றி வாக்குச்சாவடி ஆலோசனை கூட்டம்

## ஒசெ. திருமலை ஆ. முத்துராமலிங்கம் , அலவை நாகராஜன் பங்கேற்பு.

சிவகங்கை. டிச.17

சிவகங்கை மாவட்டம் முழுவதும் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி எனும் முன்னெடுப்பின் படி

அலவாக்கோட்டையில் ஆலோசனைக் கூட்டமானது அலவை நாகராஜன் தலைமையிலும், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் பவானி கணேசன், வழக்கறிஞர் திருமலை ஏ. டி. சேகர் , பிரதிநிதி ஒக்கூர் லெ. சோமசுந்தரம் , மாவட்ட சுற்றுசூழல் அணி துணை அமைப்பாளர் திருமலை குமணன் , திராவிடமணி , நாகமுத்து , இளஞ் செழியன் ஆகியோரது முன்னிலையிலும் நடைபெற்றது...

இந்த கூட்டத்தில் சிவகங்கை வடக்கு ஒன்றிய செயலாளர் திருமலை

ஆ. முத்துராமலிங்கம் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார்...

இந்த நிகழ்ச்சியில் இளைஞரணி வேல்முருகன், மாணவரணி திருமலை ஏழுமலைச்சாமி , தேவன் , மணி , கணேசன் , நாராயணன் , அண்ணாதுரை உள்ளிட்ட ஒன்றிய, கிளைக்கழக திமுக நிர்வாகிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்...

# திருப்புவனத்தில் டாஸ்மாக் தொமு சங்கம் உதயம்

சிவகங்கை. டிச.17

சிவகங்கை மாவட்டம் தமிழ்நாடு தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் அமைப்பு சாரா நலவாரியத்தின் டாஸ்மாக் ஒப்பந்த தொழிலாளர்கள் சங்கம் புதிதாக அமைக்கப்பட்டது...



இந்த நிகழ்ச்சியில் மாவட்ட தொமுச கவுன்சில் பேரவை செயலாளர் திருநாவுக்கரசு தலைமையிலும் தொமுச மாவட்ட கவுன்சில் துணைச் செயலாளர் இபி முருகேசன் , மதுரை மாவட்ட துணைச்செயலாளர் பிச்சை , தொமுச கவுன்சில் துணைத்தலைவர் யோகநாதன் , டாமின் குமார், சிவில் சப்ளையர்ஸ் தங்கச்சாமி , ஆகியோரது முன்னிலையிலும் நடைபெற்றது...

இந்த சங்கத்தின் தலைவராக பால்பாண்டி, துணைத்தலைவர் முத்துப்பாண்டி , செயலாளர் சதீஷ்மாரி, துணைச்செயலாளர் முனியாண்டி, பொருளாளர் பாண்டியன் , அமைப்புச் செயலாளர் அஜீத்பாண்டி, சுரேஷ் , செயற்குழு உறுப்பினர்களாக ராஜசேகரன் , செல்வமாரி , சித்தன் , ரவிக்குமார் , மருதுபாண்டியன் , லிங்கம் , சூரக்குமார் ஆகியோரும் நிர்வாகிகளாக ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்...

இந்த சங்கத்தின் அறிவிப்பு பலகையானது திருப்புவனம் அருகேயுள்ள டாஸ்மாக் கொள்முதல் நிலைய மாவட்ட மேலாளர் அலுவலக வாயிலில் நடப்பட்டிருந்த சங்கத்தின் அறிவிப்பு பலகையை சங்கத்தின் கௌரவத்தலைவரும் , திமுக மாவட்ட துணைச்செயலாளரும், திருப்புவனம் பேரூராட்சி தலைவருமான த. சேங்கைமாறன் , மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மணலூர் கே. எம். பொற்கோ ஆகியோர் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு திறந்து வைத்து கருத்துக்களை வழங்கினர்...

மாவட்ட கவுன்சில் பேரவை செயலாளர் திருநாவுக்கரசு வரவேற்புரையாற்றி சங்க ஒற்றுமை குறித்து கருத்துக்களை வழங்கினார்...

இந்த நிகழ்ச்சியில் சங்கத்தின் சட்ட ஆலோசகர் செல்லச்சாமி , ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் புலியூர் ரவி , திருப்புவனம் பேரூர்க்கழக துணைச் செயலாளர் மீனாட்சி சுந்தரம் , மாவட்ட மீனவரணி அண்ணாமலை , பாலகிருஷ்ணன் உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டனர்...

பங்குகொண்ட அனைவரும் டாஸ்மாக் சுமைதூக்கும் ஒப்பந்த தொழிலாளர்கள் அனைவருக்கும் கைத்தறி ஆடை போர்த்தி வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டனர்..

# ஸ்மார்ட் இந்தியா ஹேக்கத்தான் போட்டிகளில் இந்தியாவில் ஆறு சதவீதம் மக்கள் தொகை கொண்ட தமிழக மாணவர்கள் 22 சதவீதம் வெற்றி பெற்று இருப்பது பெருமிதத்தை அளிக்கிறது

## தமிழகத் தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா செய்தியாளர்களை சந்தித்து பேட்டியளித்தார்

காஞ்சிபுரம், டிச.17-

காஞ்சிபுரம் மாவட்டம் தாம்பரம் அருகே உள்ள தாம்பரம் சாய்ராம் பொறியியல் கல்லூரியில் அகில இந்திய தொழில்நுட்ப கழகம் சார்பில் இந்திய அளவில் 60 மையங்களில் ஸ்மார்ட் இந்தியா ஹேக்கத்தான் போட்டிகள் நடைபெற்றது

நாடு முழுவதும் அரசின் பல்வேறு துறைகளில் உள்ள 275 பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்காக 1800 மாணவர்கள் கொண்ட குழுவினர் இந்த போட்டிகளில் பங்கேற்றனர்

தாம்பரம் சாய்ராம் பொறியியல் கல்லூரியில் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்கள் பங்கு பெற்ற ஸ்மார்ட் இந்தியா ஹேக்கத்தான் போட்டிகளில் 200 மாணவர்கள் 20 குழுக்களாக கலந்து கொண்டனர்

இந்த போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசளிக்கும் நிகழ்ச்சி சாய்ராம் கல்லூரி தலைவர் சாய் பிரகாஷ் லியோ முத்து தலைமையில் நடைபெற்றது




தமிழக தொழில்துறை அமைச்சர் டி .ஆர். பி. ராஜா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மாணவர்களின் ஆராய்ச்சி குறித்து நேரில் கேட்டறிந்து ஸ்மார்ட் இந்தியா ஹேக்கத்தான் போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுகளை வழங்கி பாராட்டினார்

அப்போது அவர் செய்தியாளர்களிடம் அளித்த பேட்டியில் கூறுகையில்

தமிழக முதலமைச்சர் திராவிட நாயகன் கல்விக்கும் அதன் மூலம் வரும் வளர்ச்சிக்கும் மிகுந்த முக்கியத்துவத்தை கொடுப்பவர்

தமிழகம் உற்பத்தி மட்டுமல்லது ஆராய்ச்சி துறையில் மிகப்பெரிய ஒரு அடியை எடுத்து வைத்துக் கொண்டிருக்கிறது

இந்திய அளவில் 1800 அணிகள் கலந்து கொண்டு நடைபெற்ற ஸ்மார்ட் இந்தியா ஹேக்க தான் போட்டிகளில் தமிழக கல்லூரிகளில் அணிகள் 22 சதவீதம் வெற்றி பெற்றுள்ளனர்

இந்தியா முழுக்க நடக்கும் இந்த போட்டிகளில் ஆறு சதவீத மக்கள் தொகை கொண்ட தமிழ்நாடு மாணவர்கள் 22 சதவீதம் தேர்வாகி வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்றால் கல்வியில் சிறந்த தமிழ்நாடு என்று நாம் எல்லோரும் மார்தட்டி சொல்லிக் கொண்டிருக்கிறோமே அதன் விளைவு தான் மாணவர்கள் தேர்வாகியிருக்கிறார்கள் கல்வியில் சிறந்த தமிழ்நாடு என்று நாம் சொல்வதுதான் அதிகப்படியான வெற்றி கிடைத்திருக்கிறது

இந்த ஹேக்கத்தான் மூலம் படிப்பில் இருந்து அடுத்த கட்டமாக செயல் திட்டமாக செயல் வடிவமாக ஆராய்ச்சிக்கு போகிறவர்கள் புதிய அடியை எடுக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது

இது போன்ற ஹேக்கத்தான்களை நாம் தமிழ்நாட்டிலும் செய்து கொண்டிருக்கிறோம் தொடர்ந்து இந்திய அளவில் நமது மாணவர்கள் வெற்றி பெறுவதை பார்க்கும் பொழுது மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளது என்றார்.




■ தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் துறையின் சார்பில் கோவை தெற்கு வட்டார போக்குவரத்து அலுவலகம் வாகன ஒட்டடுனர்களுக்கு துண்டு பிரச்சுரம் கொடுத்து விழிப்புணர்வு ஏற்படுத்தம் விதமாக இந்நிகழ்ச்சி நடைபெற்றது இதில் கோவை தெற்கு வட்டார போக்குவரத்து ஆய்வாளர் கூறுகையில்இருசக்கர வாகனம் அதிகப்படியான வேகத்தில் செல்வது ஆபத்து சாலையில் குறிப்பிட்டுள்ள கிலோமீட்டர் வேகத்தில் செல்ல வேண்டும்இருசக்கர வாகன ஓட்டிகள் தலைக்கவசம் அணிய வேண்டும்18 வயதுக்குட்பட்ட சிறார்கள் வாகனத்தை இயக்குவது சட்டப்படி . சாலையில் உள்ள எச்சரிக்கை சின்னங்கள் விபத்து நடக்கும் பகுதிகளை குறிப்பதால் கவனத்துடன் செல்ல வேண்டும்மலைப்பகுதியில் மேல் ஏறி செல்லும் வாகனத்திற்கு முதலில் வழி விட வேண்டும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அறிவித்த உத்தரவு சின்னங்கள் எச்சரிக்கை சின்னங்கள் தகவல் சின்னங்களை வாகன ஒட்டுனர்கள் பின்பற்ற வேண்டும் என வலியுறுத்தினார்

# பாக். தூண்டிவிடும் பயங்கரவாதத்தை முழு பலத்துடன் எதிர்கொள்வோம்: ஐநாவில் இந்தியா திட்டவட்டம்

நியூயார்க், டிச.17-

''பாகிஸ்தானால் தூண்டிவிடப்படும் பயங்கரவாதத்தை இந்தியா தனது முழு பலத்துடன் எதிர்கொள்ளும்'' என ஐநாவில் இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி பர்வதனேனி ஹரிஷ் திட்டவட்டமாக தெரிவித்தார். ஐநா பாதுகாப்பு கவுன்சிலில் நடந்த விவாதத்தின் போதுபர்வதனேனி ஹரிஷ் பேசியதாவது: ஜம்மு காஷ்மீர் எப்போதும் இந்தியாவின் ஒருங்கிணைந்த மற்றும் பிரிக்க முடியாத பகுதி என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். பயங்கரவாதத்தின் உலகளாவிய மையமாக பாகிஸ்தான் திகழ்ந்து வருகிறது. இந்தியா 65 ஆண்டுகளுக்கு முன்பு, நல்லெண்ணம் மற்றும் நட்புறவின் அடிப்படையில் சிந்து நதி நீர் ஒப்பந்தத்திற்கு சம்மதம் தெரிவித்தது.

பாகிஸ்தான் மூன்று போர்களையும் ஆயிரக்கணக்கான பயங்கரவாதத் தாக்குதல்களையும் இந்தியா மீது தொடுத்து, ஒப்பந்தத்தின் உணர்வை மீறியுள்ளது. இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் பயங்கரவாத தாக்குதலில் ஒரு வெளிநாட்டவர் உட்பட 26 பேர் கொல்லப்பட்டனர். பாகிஸ்தானின் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வரும் வரை, இந்த ஒப்பந்தம் நிறுத்தி வைக்கப்படும் என்று இந்தியா இறுதியாக அறிவித்துள்ளது. பாகிஸ்தானால் தூண்டிவிடப்படும் பயங்கரவாதத்தை இந்தியா தனது முழு பலத்துடன் எதிர்கொள்ளும். பாகிஸ்தான் பாகிஸ்தான் ஒரு முன்னாள் பிரதமரை சிறையில் அடைப்பது, அரசியல் கட்சியைத் தடை செய்வது மற்றும் அதன் ஆயுதப் படைகள் 27வது திருத்தத்தின் மூலம் ஒரு அரசியலமைப்பு சதியை அரங்கேற்றி, அதன் பாதுகாப்புப் படைத் தளபதிக்கு வாழ்நாள் முழுவதும் பாதுகாப்பு வழங்குகிறது. பாகிஸ்தான் இந்தியாவுக்கும், மக்களுக்கும் தீங்கு விளைவிப்பதில் தீவிர கவனம் செலுத்துகிறது. இவ்வாறு இந்தியாவின் நிரந்தர பிரதி நிதி பர்வதனேனி ஹரிஷ் கூறினார்.



# பழனியில் போக்குவரத்து மேலாளரின் சர்வாதிகாரப் போக்கை கண்டித்து கொண்டன ஆர்ப்பாட்டம்

திண்டுக்கல், டிச.17-

திண்டுக்கல் மாவட்டம் பழனி அடுத்த ஆயக்குடியில் உள்ள அரசு போக்குவரத்துக் கழக பணிமனை முன்பு அறிவர் அம்பேத்கர் போக்குவரத்து தொழிலாளர்கள் சங்கம் சார்பாக பழனி கிளை இரண்டு நிர்வாகத்தின் சர்வாதிகாரப் போக்கை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றன.

இந்த ஆர்ப்பாட்டத்தின் தலைமையாக திருப்பூர் மண்டல தலைவர் கருப்புசாமி முன்னிலையாக பேரவை துணை தலைவர் திருமா மணி பொது செயலாளர் மாரியப்பன் மண்டல பொருளாளர் துரைசாமி மண்டல துணை செயலாளர் முத்துராஜா மற்றும் ஆர்ப்பாட்டத்தின் சிறப்பு அழைப்பாளர்களாக மாநில பேரவை தலைவர் அர்ஜுனன் மாநில பேரவை பொது செயலாளர் விடுதலை ரவி மாநில பேரவை பொதுச் செயலாளர் பொன்னுச்சாமி மற்றும் கண்டன உரையாக மாநில துணை பொது செயலாளர் கனியமுதன், கோவை மண்டல செயலாளர் சுசி கலையரசன் மற்றும் மாவட்ட செயலாளர் திருவளவன் மண்டல துணை செயலாளர் ஜலால் முகமது மாவட்ட செய்தி தொடர்பாளர் பொதினிவளவன் மாவட்டத் துணைச் செயலாளர் பாவேந்தன் தொகுதி செயலாளர் முத்தரசு தொகுதி துணை செயலாளர் போர்கொடியேந்தி இளஞ் சிறுத்தை பாசறை அமைப்பாளர் வாஞ் சிநாதன் மட்டும் திருப்பூர் இரண்டு கிளை நிர்வாகிகள் தலைவர் கருப்புசாமி பொருளாளர் மோகன்ராஜ் பொருளாளர் ஆண்டவன் துணைத் தலைவர் சுரேஷ்குமார் துணைச் செயலாளர் சிவக்குமார் செயற்குழு உறுப்பினர் சங்கரன் சக்திவேல் தங்கராஜ் மற்றும் கிளை ஒன்று நிர்வாகிகள் தலைவர் செல்வகுமார் செயலாளர் கிருஷ்ணன் பொருளாளர் சிவச்சந்திரன் துணைத் தலைவர் சண்முகம் பேச்சாளர் குணசேகரன் செயற்குழு உறுப்பினர்கள் ஈஸ்வரன் ராம்குமார் சின்னத்துரை கோபாலகிருஷ்ணன் கௌரவ தலைவர் ஜேம்ஸ் ஜெயராஜ் பன்னீர்செல்வம் பாலகிருஷ்ணன் மணிமாறன் மற்றும் கட்சி நிர்வாகிகள் மாநில கல்வி பொருளாதாரம் பொறுப்பாளர் வழக்கறிஞர் வாய்க்கால் சாமி நகர பொருளாளர் தமிழ் அண்ணன் அன்பழகன் இளைய துரை கார்த்திக் வளவன் சபிக் மற்றும் திருப்பூர் தெற்கு மாவட்ட செயலாளர் சதீஷ்குமார், தமிழ் புலிகள் கட்சி மாவட்ட செயலாளர் இரணியன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டம் நடைபெற்றன..

# செம்பாக்கம் வடக்கு பகுதி கழக செயலாளர் ஏ.கே.கருணாகரன் அவர்கள் தலைமையில் 1300 விளையாட்டு வீரர்களுக்கும். பள்ளி மாணவர்களுக்கும் விளையாட்டு பொருட்கள்

பல்லாவரம், டிச.17-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் பல்லாவரம் சட்ட மன்ற தொகுதி தாம்பரம் மாநகரம் செம்பாக்கம் வடக்கு பகுதி திமுக சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு பகுதி செயலாளர்

ஏ.கே.கருணாகரன் அவர்கள் தலைமையில் பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் டில்லிபாபு வரவேற்புரையில் 1300 விளையாட்டு வீரர்களுக்கும். பள்ளி மாணவர்களுக்கும் விளையாட்டு பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளரும், அமைச்சருமான தா.மோ.அன்பரசன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பு உரையாற்றி இளைஞர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் நல திட்ட உதவிகள் வழங்கினார்.





இதில் பல்லாவரம் சட்ட மன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், மண்டல குழு தலைவர்கள் வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை. பகுதி கழக செயலாளர்கள் தா.ஜெய்குமார்,

இ.எஸ்.பெர்னாட், மாநில தகவல் தொழில்நுட்ப அணியின் துணை அமைப்பாளர்கள் அ.தமிழ்மாறன், என்.நவீன், பகுதி கழக நிர்வாகிகள். மாவட்ட. மாநகர. பிரதிநிதிகள். மாவட்ட. மாநகர. பகுதி இளைஞர் அணி. மாணவர் அணி. மற்ற அணிகளின் அமைப்பாளர்கள். துணை அமைப்பாளர் வட்ட கழக செயலாளர்கள். நிர்வாகிகள். மாமன்ற உறுப்பினர்கள். வார்டு இளைஞர் அணி. மாணவர் அணி. மகளிர் அணி. பாக முகவர்கள் என கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161